பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
14 12 2024 **SATURDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஒரே நாடு-ஒரே தேர்தல் தொடர்பான இரண்டு மசோதாக்கள் மக்களவையில் வரும் திங்கட்கிழமை தாக்கல் செய்யப்படுகின்றன
- மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.
- காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை உறுப்பினருமான திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், இன்று சென்னையில் காலமானார்.
- தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பெய்து வரும் மழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழையினால் தடைபட்டுள்ளது.

>>>>><<<<<

ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பான இரண்டு மசோதாக்கள், மக்களவையில் வரும் திங்கட்கிழமை தாக்கல் செய்யப்படுகின்றன.

சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் இதனை தாக்கல் செய்யவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுதொடர்பாக, முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதை அடுத்து, இந்த மசோதாக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன.

முதல்கட்டமாக மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கும், அதற்கடுத்த 100 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்கும் இந்த குழு பரிந்துரைத்துள்ளது.

>>>>><<<<<

மக்களவையில் அரசியல் சாசனம் தொடர்பான சிறப்பு விவாதம் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெற்று வருகிறது.

பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றி வருகின்றனர்.

இந்த விவாதத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பதிலளித்து பேசவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் பஙகேற்றுள்ள மாநாடு, இரண்டாவது நாளாக இன்று புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்றும் நாளையும் பங்கேற்கிறார்.

கூட்டாட்சி தத்துவத்திற்கு வலுசேர்க்கும் வகையில், நான்காவது முறையாக இந்த மாநாடு நடைபெற்று வருகிறது.

முதலாவது மாநாடு 2022-ஆம் ஆண்டு தரம்சாலாவிலும், அதற்கு அடுத்த இரண்டு மாநாடுகள் புதுதில்லியிலும் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உற்பத்தி, வேளாண், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேவைத் துறை தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. பி.எல். வர்மா கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை கூறியுள்ள அவர், அரசியல் சாசனத்திற்கு காங்கிரஸ் எப்போதும் மதிப்பளித்ததில்லை என்று குற்றம் சாட்டினார்.

நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டதை யாராலும் மறக்க இயலாது என்றும் அவர் கூறினார்.

அரசியல் சாசனத்திற்கு காங்கிரஸ் மதிப்பளிக்கவில்லை என்பதற்கு அவசர நிலை பிரகடனமே உதாரணமாகும் என்றும் திரு. பி.எல். வர்மா தெரிவித்தார்.

>>>>><<<<<

பிரதமரின் ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் கீழ், 21 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு 2 லட்சம் ரூபாய் வரை காப்பீட்டுத் தொகை கிடைக்கும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுவரை 17 ஆயிரத்து 211 கோடி ரூபாய் அளவிற்கு காப்பீட்டு தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உத்தரவாதம் இன்றி வழங்கப்படும் வேளாண் கடனுக்கான உச்சவரம்பு 2 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

இதுவரை, 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டு வந்ததாகவும், தற்போது இந்த தொகை உயர்த்தப்படுவதாகவும் ரிசர்வ் வங்கியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து இது செயல்பாட்டுக்கு வரும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை உறுப்பினருமான திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், உடல்நலக்குறைவு காரணமாக இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 75.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவராகவும், மத்திய அமைச்சராகவும் பணியாற்றிய அன்னாரது மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தமிழக மக்களின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அன்னாரது மறைவு தமக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியிருப்பதாக கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், சிறுவயதிலேயே அரசியல் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், முன்னாள் மத்திய அமைச்சராகவும், தற்போது சட்டப்பேரவை உறுப்பினராகவும் மக்களுக்காக பணியாற்றியதாக கூறியுள்ளார்.

அவரது குடும்பத்தினருக்கும் கட்சியினருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் மறைவு அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் தமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

அஇஅதிமுக, மதிமுக, பாமக, விடுதலை சிறுத்தைகள் கட்சி உட்பட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் அன்னாரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்திற்கு மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 56 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, தென் மாவட்டங்களில் பெய்து வரும் மழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் மூன்றாவது நாளாக இன்றும் மழை நீடிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - திருமலைக்குமார் 48 செகண்ட்ஸ்)

தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ள பாதிப்பு காரணமாக, பல்வேறு பகுதிகளில் போக்குவரத்து மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 52 செகண்ட்ஸ்)

தென்காசி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் 33 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, தென்மாவட்டங்களின் மழை பாதிப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், காணொலி வாயிலாக இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

>>>>><<<<<

போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவிலிருந்து 4 இந்தியர்கள் பாதுகாப்பாக புதுதில்லி அழைத்து வரப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக இந்திய தூதரகம் தங்களுக்கு உணவு உள்ளிட்ட உதவிகளை வழங்கி வந்ததாகவும், இதன் பின்னர் தாங்கள் லெபனானுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து தாயகம் அழைத்து வரப்பட்டதாக தில்லி வந்து சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

இந்தியா — ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழையினால் தடைபட்டுள்ளது.

பிரிஸ்பேனில் தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து, பேட் செய்த ஆஸ்திரேலியா விக்கெட் இழப்பின்றி 28 ரன் எடுத்திருந்த நிலையில், மழை குறுக்கிட்டதன் காரணமாக ஆட்டம் தடைபட்டுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று, சமநிலையில் உள்ளன.

>>>>><<<<<